**செ.வெ. எண்: 533** **நாள்: 10.09.2012**

<u>பத்திரிகைச் செய்தி</u>

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை மற்றும் சத்துணவு அமைச்சர் திரு.எம்.சி. சம்பத் அவர்கள் 10.09.2012 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் பட்டு வளர்ச்சித் துறை செயல்பாடுகளை ஆய்வு செய்தார்கள். இத்திறனாய்வுக் கூட்டத்தில் கைத்தறி,. கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப அவர்களும் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் திரு.வெ.பிரபாகரன், இ.வ.ப., அவர்களும் பட்டு வளர்ச்சித்துறையின் இணை இயக்குநர்களும், துணை இயக்குநர்களும், உதவி இயக்குநர்களும் கலந்து கொண்டனர்.

தற்போது தமிழகத்தில் 36402 ஏக்கர் பரப்பளவில் 23691 விவசாயிகள் மல்பரி சாகுபடி செய்து பட்டு வளர்ப்பில் ஈடுபட்டு உள்ளனர். மல்பரி சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும் பயன் பெறும் வகையில் சொட்டு நீர்பாசன அமைப்புகள் 2011–2012 ஆம் ஆண்டில் 958 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்பட்டு 20 சதவீதம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். 2012–2013 ஆம் ஆண்டில் 100 சதவித விவசாயிகளும் பயன்பெற வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் 1500 ஏக்கர் மல்பரி பரப்பளவில் சொட்டு நீர்பாசன அமைப்பு நிறுவப்படவுள்ளது. எஞ்சியுள்ள விவசாயிகளுக்கும், தமிழ்நாட்டின் நிலத்தடி நீர் பற்றாக்குறையினை கருத்தில் கொண்டு பாசன நீரின் அளவினை குறைக்கவும், உற்பத்தியினை பெருக்கவும் சொட்டு நீர்பாசனம் இன்றியமையாக உள்ளதால் சொட்டு நீர்பாசனத்தின் பயன் சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

2011–2012 ஆம் ஆண்டு, கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் ரூ.12.96 கோடி நிதிச் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2012–2013 ஆண்டிற்கு முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ள ரூ.29.02 கோடியில், மத்திய அரசின் பங்காக ரூ.13.71 கோடியும், மாநில அரசின் பங்காக ரூ.8.13 கோடியும், பயனாளிகள் பங்காக ரூ.7.16 கோடியும் அடங்கும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது திறனாய்வின் போது, விவசாயிகள் நலனுக்காகவும், துறை வளர்ச்சிக்காகவும் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுரைகள் வழங்கினார்.

- புதிய விவசாயிகள் இந்த பட்டுப் புழுவளர்ப்பு தொழிலை ஆர்வமுடன் மேற்கொள்ள ஏதுவாக பட்டுவளர்ப்பு தொழில் சிறந்து விளங்கும் உடுமலைப்பேட்டை போன்ற பகுதிகளில் பட்டு விவசாயிகளின் வெற்றி கதைகளை குறுந்தகடுகளில் பதிவு செய்து, பிற மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கி பட்டுப்புழுவளர்ப்புத் தொழில் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் .
- கல்ராயன்மலை, ஏலகிரிமலை மற்றும் பிற மலைப்பகுதிகளில் உள்ள பழங்குடியின விவசாயிகளை பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடுத்த தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110ன் கீழ் அறிவிப்பு செய்த "பட்டு விவசாயிகளுக்கு நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் விநியோகித்தல்" திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்ட விபரங்களின் முன்னேற்றம் குறித்து துறை அலுவலர்களிடம் கேட்டறிந்து, தகுதியுள்ள பயனாளிகள் இத்திட்டத்தின் தேர்வு செய்யப்பட வேண்டும் என அறிவுரைகள் வழங்கினார்.
- பட்டுக் கைத்தறி நெசவாளர்களின் வேலைபளுவினைக் குறைக்கவும், உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், பட்டு கைத்தறிகளை மேம்படுத்துவதற்கு தறிக்கு தலா ரூ.10,000 மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2010–2011 ஆம் ஆண்டில் 6,000 தறிகளுக்கும், 2011–2012 ஆம் ஆண்டில் 5,300 தறிக்களுக்கும் அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இதில், தற்பொழுது 2,371 தறிகளுக்கு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 8,929 தறிகளுக்கு மேம்படுத்தப்பட்ட இயந்திரங்கள் பொருத்த இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை செயலர் அவர்கள் திட்டவாரியாக பட்டு வளர்ச்சிப் பணிகள் குறித்து திறனாய்வு மேற்கொண்டார். திறனாய்வின் போது, அரசுச் செயலர் அவர்கள் பின்வரும் அறிவுரைகளை வழங்கினார்.

- தமது கள ஆய்வின்பொழுது விவசாயிகளுக்கு இளம்புழு வளர்த்து விநியோகிப்பதன் முக்கியத்துவத்தை அறிந்ததாகவும், விவசாயிகள் வெற்றிகரமான பட்டுக்கூடு அறுவடைக்கு இளம்புழுக்களைப் பெற்று புழுவளர்ப்பு மேற்கொள்வது அவசியம் என்பதால் அனைத்து மாவட்டங்களிலும் இளம்புழு வளர்ப்பு மையங்கள் அதிக எண்ணிக்கையில் துவக்கி செயல்பட வேண்டும்.
- மல்பரி நடவு செய்ய உள்ள புதிய விவசாயிகளுக்கும், ஏற்கனவே மல்பரி நடவு செய்த விவசாயிகளுக்கும் சம அளவில் ஒசூர் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் பட்டுப் புழுவளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி , பயிற்சி உபகரணங்கள் விநியோகம், கண்டுணர் பயிற்சி முதலியவை வழங்கப்படவேண்டும்.
- இத்துறையின் மூலம் பட்டு மலர் மாத இதழ், விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.11.00 என்ற விலையில் வழங்கப்பட்டு வந்தது. இப்பட்டு மலரில், பட்டுத் தொழில் குறித்த நவீன தொழில்நுட்பங்கள் விபரமாக தெரிவிக்கப்பட்டு வருவதை கருத்தில் கொண்டு, இவ்விதழ் அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடையும் வண்ணம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நல்லாசியுடன் மானிய விலையில் ரூ.2.00 என்ற குறைந்த விலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. மேலும், இவ்விதழ் பட்டு விவசாயிகளின் வீட்டிற்கே சென்றடையும் வகையில் அஞ்சல் வழியில் அனுப்பிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.
- அரசு பட்டுப் பண்ணைகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மல்பரி தோட்ட இலைகளை விவசாயிகளை புழுவளர்ப்புக்குப் பயன்படுத்தியும் (Delinked rearing), பண்ணைகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தியும் பட்டுப் புழுவளர்ப்பு மேற்கொண்டு வருமானம் பெறவுள்ள வாய்ப்புகள் குறித்து துறை அலுவலர்கள் ஆய்வு செய்து செயல்படுத்த வேண்டும்.
- மல்பரி புது நடவு மேற்கொள்ள உள்ள விவசாயிகளை துறை அலுவலர்கள் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி, ஊக்குவித்து தேர்வு செய்ய வேண்டும்.

தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்கள் 2011.–2012ம் ஆண்டில் பட்டு வளர்ச்சி பணிகள் குறித்த சாதனைகளையும் 2012–2013ம் ஆண்டு மேற்கொள்ளப்பட உள்ள திட்ட விபரங்களையும் விளக்கினார். மேலும், பட்டு வளர்ச்சித்துறை முன்னேற்றத்திற்காகவும் விவசாயிகள் நலனுக்காகவும்

மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசுச் செயலர், கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை, அவர்கள் திறனாய்வுக் கூட்டத்தில் வழங்கிய அறிவுரைகள் மற்றும் ஆணைகளை நிறைவேற்றுவதற்கு பட்டு வளர்ச்சித்துறை விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வர் என உறுதியளித்தார்.

துணை இயக்குநர், விதை ஒருங்கிணைப்பு, ஒசூர் தமது நன்றியுரையில் இத்திறனாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த மாண்புமிகு ஊரக தொழில் துறை மற்றும் சத்துணவு துறை அமைச்சர் அவர்களுக்கும், கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை செயலர் அவர்களுக்கும், தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்களுக்கும் பட்டு வளர்ச்சித்துறை இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், தலைமைச் செயலக அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்தார். இத்துடன் திறனாய்வுக் கூட்டம் முடிவுற்றது.

**(வெ.பிரபாகரன்)**
**தலைமை வனப் பாதுகாவலர் மற்றும்**
**இயக்குநர், பட்டு வளர்ச்சித்தறை, சேலம்**

**வெளியீடு: –**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**